403

# சர்வதேச நிலைமை

## நிரந்தர சமாதானத்திற்கு வழி

என். சங்கரையா

403/3-57

2,4 N24 N57

183260

# சர்வதேச நிலைமைபற்றி

எழுதியது

என். சங்கரய்யா

★

இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி
தமிழ்நாடு கமிட்டி வெளியீடு.

ஜுலை 1957]

[விலை 2 அணா

# முன்னுரை

தமிழ் நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தினர்கள் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான இயக்கம் இப்பொழுது நடந்து வருகிறது.

கட்சியில் சேரும் புதிய அங்கத்தினர்களுக்கும், ஏற்கனவேயே உள்ள அங்கத்தினர்களுக்கும் அரசியல் போதனை அளிப்பதற்கான வகுப்புக்களை தமிழ்நாடு முழுவதும் நடத்த எல்லா ஜில்லாக் கமிட்டிகளும் ஏற்பாடு செய்து வருகின்றன.

இந்த வகுப்புக்களுக்கான பாட திட்டங்களைத் தயாரித்து அவற்றை தனித்தனியே சிறு பிரசுரங்களாக வெளியிடுவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

"சர்வதேச நிலைமைபற்றி" என்ற தலைப்புடன் பிரசுரிக்கப்படும் இந்த வெளியீடு, சர்வதேச நிலைமைபற்றி கட்சி அங்கத்தினர்களுக்கு வகுப்பு நடத்தவேண்டிய தோழர்களுக்கும், இந்த வகுப்புக்களில் பங்கெடுத்துக் கொள்ளும் தோழர்களுக்கும் பயன்படும் என்று கருதுகிறோம்.

சென்னை,
3—7—57.

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**
**தமிழ்நாடு கமிட்டி.**

# சர்வதேச நிலைமைபற்றி

......

## சர்வதேச நிலைமை

உலக ஏகாதிபத்ய அமைப்பில் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி பெரும் பிளவை உண்டாக்கியது. இரண்டாவது யுத்தத்தின் இறுதியில் ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் பல நாடுகள் முதலாளித்வ சுரண்டலிலிருந்து விடுபட்டு சோஷலிஸ்ட் பாதையில் பிரவேசித்தன. இதன் காரணமாக உலக ஏகாதிபத்ய அமைப்பில் ஏற்பட்டிருந்த பிளவு மேலும் அதிகரித்தது. அத்துடன் காலனி நாடுகளாக இருந்த பல நாடுகள் ஏகாதிபத்ய ஆதிக்கத்தை முறியடித்துவிட்டு சுதந்திர நாடுகளாகிவிட்டன. இதன் விளைவாகவும் உலக ஏகாதிபத்ய அமைப்பு பெரிதும் பலஹீனமடைந்தது.

ஏகாதிபத்ய சுரண்டல் பிரதேசம் சுருங்கிவிட்டது. இது உலக முதலாளித்துவ அமைப்பிற்கு பெரும் நெருக்கடியை உண்டுபண்ணியிருக்கிறது பிரதான முதலாளித்வ நாடுகளுக்கிடையில் முரண்பாடுகளைத் தீவிரப்படுத்தியிருக்கிறது.

இதனுல் ஆத்திரமடைந்திருக்கும் ஏகாதிபத்தியங்கள் மீண்டும் தங்கள் ஆதிக்கத்தை உலகில் ஏற்படுத்த யுத்த தயாரிப்புக்களில் இறங்கி வருகின்றனர். சோஷலிஸ்ட் நாடுகளையும், புதிதாக சுதந்திரமடைந்திருக்கும் நாடுகளையும் அழித்து, அந்நாடுகளின் மீது தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்த ஏகாதிபத்யவாதிகள் திட்டமிட்டு வருகின்றனர்.

கொரிய யுத்தமும், இந்தோசீனு யுத்தமும் அவர்களால் தூண்டிவிடப்பட்டது. சோவியத் யூனியன், சீனு, இந்தியா ஆகிய நாடுகளின் பெருமுயற்சியால் இந்த யுத்தங்கள் முற்றுப் பெற்றன.

ஏகாதிபத்ய முகாமின் தலைவனாக அமெரிக்க ஏகாதிபத்யம் விளங்குகிறது. இவர்கள் அட்லாண்டிக் ஒப்பந்தத்தை உருவாக்கி ஐரோப்பாவில் கெடுபிடி யுத்த நிலையை உண்டாக்கினார்கள். சமீபத்தில் ஹங்கேரி நாட்டில் உள்ள சோஷலிஸ்ட் சர்க்காரைக் கவிழ்ப்பதற்காக பிற்போக்கு சக்திகளின் ஆயுதமேந்திய கலகத்தை தூண்டி விட்டனர்.

அமெரிக்கா, தென்கிழக்கு ஆசிய ராணுவ ஒப்பந்தத்தை உண்டாக்கியது. இதில் பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், தாய்லந்து ஆகிய நாடுகள்தான் ஆசியாவை சேர்ந்த நாடுகள். மற்றபடி அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஆஸ்திரேலியா, நியூஜிலந்து ஆகிய நாடுகள் ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்த நாடுகள் அல்ல. இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஆசிய நாடுகளுக்குள்ளேயே யுத்தத்தை உண்டாக்க ஏகாதிபத்யவாதிகள் முயற்சிக்கிறார்கள்.

இதே போல் பாக்தாத் ஒப்பந்தத்தை பிரிட்டன் உருவாக்கியது. இராக், இரான், பாகிஸ்தான், துருக்கி ஆகிய நாடுகள் இதில் அங்கத்தினர்கள். அமெரிக்கா, இந்த ஒப்பந்த ஸ்தாபனத்தில் தான் சேரவில்லை என்று கூறிக்கொண்டே இப்பொழுது இந்த ஸ்தாபனத்தின் ராணுவக் கமிட்டியில் சேர்ந்திருக்கிறது. அமெரிக்கா-பாகிஸ்தான் ராணுவ ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவும் பாகிஸ்தானுக்குமிடையில் தகராறுகளைத் தூண்டிவிட அமெரிக்கா முயற்சிக்கிறது.

"கம்யூனிஸ எதிர்ப்புக்காகத்தான்" இந்த ராணுவக் கூட்டணிகள் என்று பறை சாற்றிக்கொண்டே, ஏகாதிபத்யங்கள் தங்கள் சொந்த ஆதிக்கத்தை புதுப்பிக்கும் ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். சமீபத்தில் எகிப்தின் மீது பிரிட்டனும், பிரான்சும், இஸ்ரேலின் மூலம் தொடுத்த ஏகாதிபத்ய ஆக்ரமிப்பு இதற்குத் தலைசிறந்த உதாரணமாகும். அதேபோல் பிரான்ஸ், அல்ஜீரிய மக்களை தாக்கி வருவதும் அனைவருக்கும் தெரியும். சைப்ரஸ் மக்களின் மீது பிரிட்டன் நடத்திவரும் தாக்குதலும், இரான் உள்நாட்டு விஷயத்தில் அமெரிக்கா தலையிட்டதும், மேலும் சில

உதாரணங்களாகும். சீனவுக்கு சொந்தமான பார்மோசாவை சியாங்-கே-ஷேக் மூலம் அமெரிக்கா தன் ஆதிக்கத்தில் வைத்திருப்பதும், கோவா விஷயத்தில் அமெரிக்காவும், பிரிட்டனும் போர்ச்சுகீஸிய சர்க்காருக்கு பின் பலமாக இருந்து வருவதும், காஷ்மீர் பிரச்னையில் இந்தியாவிற்கெதிராக அமெரிக்கா பாகிஸ்தானை தூண்டி வருவதும், ஏகாதிபத்தியங்களின் திட்டங்களை அம்பலப்படுத்துகின்றன. அதேபோல் ஜர்மனி, கொரியா, இந்தோசீன ஆகிய நாடுகளில் உள்ள மக்கள், இன்று பிளவுபட்டிருக்கும் தங்கள் தேசங்களை சுமுகமாக ஒன்றுபடுத்துவதற்கு இடையூருக ஏகாதிபத்யங்கள் சூழ்ச்சி செய்து வருகின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மைகளாகும்.

ஏகாதிபத்யங்களின் இத்தகைய யுத்த முயற்சிகளை எதிர்த்து சோஷலிஸ்ட் நாடுகளும் புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகளும் சமாதானத்தைப் பாதுகாக்க பெரு முயற்சி செய்துவருகின்றனர்.

பஞ்ச சீலத்தின் அடிப்படையில் உலகப் பிரச்னைகளுக்கு பரிகாரம் காணவேண்டுமென்று இந்தியாவும், சீனவும் விடுத்த கூட்டறிக்கை மிகவும் முக்யமான சம்பவமாகும். ஆசிய சுதந்திரத்தையும், உலக சமாதானத்தையும் பாதுகாப்பதில் இந்திய சர்க்காரின் பங்கு மிகவும் முக்யத்வம் வாய்ந்ததாகும்.

இதைத் தொடர்ந்து 29 ஆசிய—ஆப்பிரிக்க நாடுகளின் மகாநாடு பாண்டுங் நகரில் கூடி ஆசிய—ஆப்பிரிக்க நாடுகளின் சுதந்திரத்தையும், உலக சமாதானத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது. பாண்டுங் மகாநாட்டின் நடவடிக்கைகள் உலக ஏகாதிபத்யங்களின் ஆக்ரமிப்புத் திட்டங்களுக்கு பெரும் முட்டுக்கட்டையாக விளங்குகின்றன.

அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு ஆயிரக் கணக்கான மைல்களுக்குப் பறந்து செல்லும் ராக்கெட் குண்டுகள் ஆகிய பயங்கர ஆயுதங்கள் இன்று அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரிட்டன் ஆகிய நாடுகள் வசம் இருக்கின்றன.

அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகளை உபயோகிப்பதில்லை என்று உலகறியப் பிரகடனம் செய்ய சோவியத் யூனியன் தயாராக இருக்கிறது. ஆனால் அமெரிக்காவும், பிரிட்டனும் இதற்கு இதுவரை சம்மதிக்காத காரணத்தால் தான் இந்த உடன்பாடு ஏற்படவில்லை.

அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகளை பரீட்சை செய்வதை உடனடியாக நிறுத்துவதற்கும் சோவியத் யூனியன் தயாராக இருக்கிறது. ஆனால் அமெரிக்கா, பிரிட்டன் இதற்கு ஒப்புக்கொள்ள மறுப்பதால்தான், இவ் விஷயத்தில் உடன்பாடு காண முடியவில்லை.

அட்லாண்டிக் ஒப்பந்தத்தையும், வார்சா ஒப்பந்தத்தையும் ஒரே சமயத்தில் ரத்து செய்வதன் மூலமாக உலகில் சமாதானத்தைப் பாதுகாக்க சாதகமான சூழ்நிலையை உண்டாக்குவோம் என சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய ஏகாதிபத்தியங்களை வற்புறுத்துகிறது. ஆனால் இந்த ஏகாதிபத்யங்கள் இந்த யோசனையை இதுவரை ஒப்புக்கொள்ள மறுத்துவருகின்றன.

ராணுவங்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கும், ராணுவச் செலவைக் குறைப்பதற்கும் சோவியத் யூனியன் ஏகாதிபத்திய வல்லரசுகளிடம் ஆயுதக் குறைப்பு திட்டத்தை முன் வைத்திருக்கிறது. ஆனால் இதுவரை ஏகாதிபத்யங்கள் இந்த ஆயுதக் குறைப்புத் திட்டத்தை வேண்டுமென்றே புறக்கணித்து வருகின்றன.

இந்தச் சூழ்நிலைமையில் யுத்த அபாயம் நீடிக்கிறது; இதைக் குறைத்து மதிப்பிடக்கூடாது.

ஆனால் யுத்தத்தை எதிர்க்கும் நாடுகளும், சக்திகளும், மக்களும் அதிகரித்து வருகின்றனர். சோஷலிஸ்டு நாடுகளும், புதிதாக சுதந்திரமடைந்துள்ள பல நாடுகளும் சமாதானத்தைப் பாதுகாக்க தீவிரமாக முயற்சி செய்துவருகின்றன. ஏகாதிபத்ய நாடுகளில் உள்ள மக்கள் மத்தியிலும் சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வு அதிகரித்து வருகிறது.

உலக சமாதான இயக்கம் உலகத்தின் சகல நாடுகளி லும் உள்ள சகல பகுதி மக்கள் மத்தியிலும் செயல்பட்டு வருகிறது. உலக சமாதான இயக்கத்தின் கோஷங்கள் மேலும் மேலும் அதிகப்படியான மக்களின் ஆதரவை பெற்று வருகின்றன. உலக சமாதான இயக்கத்தின் வளர்ச்சி யுத்த வெறியர்களின் திட்டங்களுக்கு மாபெரும் தடையாக விளங்குகிறது.

தேசங்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதும், ஜன நாயக உரிமைகளைப் பாதுகாப்பதும், யுத்தத்தை எதிர்த்து சமாதானத்தை பாதுகாக்கும் இயக்கத்துடன் பிரிக்க முடி யாதபடி இருந்திருக்கின்றன.

## ஏகாதிபத்ய முகாம் - முரண்பாடுகள் தீவிரமடைகின்றன

ஏகாதிபத்ய வல்லரசுகளின் பொருளாதார பலத் திலும், ராணுவ பலத்திலும் ஏற்படும் முக்கிய மாறுதல்கள் முதலாளித்வ நாடுகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வான, முறையற்ற வளர்ச்சியின் விளைவுகளாகும். ஏகாதிபத்ய சகாப்தத்தின்போது ஏற்படும் இந்த மாற்றங்கள், காலனி நாடுகளை மறுபடியும் பங்குபோடுவதற்கும், செல்வாக்கு மண்டலங்களை மறுபடியும் தங்களுக்குள் பிரித்துக் கொள் வதற்குமான போராட்டங்களை ஏகாதிபத்யங்களுக்கிடை யில் தவிர்க்க முடியாதபடி உண்டாக்குகின்றன.

உலக சோஷலிஸ்ட் அமைப்பு ஏற்பட்டதன் விளைவாக முதலாளித்வ சுரண்டல் மண்டலம் கணிசமாக குறைந்து விட்டது; அத்துடன் காலனி அமைப்பு முறையும் வேக மாக நொறுங்கிவருகிறது. இவற்றின் காரணமாக முத லாளித்வத்தின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சியின் விளைவுகள் மேலும் தீவிரமடைந்திருக்கின்றன.

அமெரிக்காவின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் அந்தஸ்தும், ஸ்தானமும் பலவீனமடைந்து வருகின்றன. மேற்கு ஜெர் மனி, ஜப்பான் ஆகிய நாடுகளின் சக்தி அதிகரித்து வரு

கிறது. இவை அனைத்தும் ஏகாதிபத்ய முகாமின் முரண்பாடுகளைத் தீவிரமாக்கி வருகின்றன.

பிரிட்டனின் தலையில் கைவைத்து அமெரிக்கா தன் பிடிப்பை பலப்படுத்தி வருகிறது. குறிப்பாக மத்ய கிழக்கு பிரதேசத்தில் பிரிட்டிஷ்-அமெரிக்க முரண்பாடு உச்ச கட்டத்திற்கு வந்திருக்கிறது. 1937-ல் மத்ய கிழக்குப் பிரதேசத்தில் கிடைக்கும் எண்ணெய் வளத்தில் 13 சதவிகிதத்தை அமெரிக்காவும், 80 சதவிகிதத்தை பிரிட்டனும் அனுபவித்து வந்தன. ஆனால் 1956-ல், அமெரிக்காவின் பங்கு 60 சதவிகிதமாக உயர்ந்துவிட்டது. பிரிட்டனின் பங்கு 3-ல் 1 பாகமாக குறைந்துவிட்டது.

மத்ய கிழக்கு மக்களை அடிமைப்படுத்துவதற்கு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய 3 நாடுகளும் ஏகமனதாக விரும்புகின்றன. ஆனால் இந்த வேலையை செய்து முடிக்கும் போக்கிலேயே பிரிட்டனையும், பிரான்ஸையும் காலைவாரி விட்டுவிட்டு இப்பிரதேசத்தின் எண்ணெய் வளத்தை முழுவதையும் தன் கைக்கு மாற்றிக் கொள்ள வேண்டுமென்ற முறையில் அமெரிக்கா செயல்படுகிறது.

அரபு நாடுகளுக்கு "அமெரிக்க உதவி" என்பதன் பெயரால், அரபு நாடுகளைத் தன் பிடியில் சிக்கவைக்க அமெரிக்கா முயற்சி செய்கிறது. இந்த உதவி செய்வதன் பெயரால், அமெரிக்கா தன் சுரண்டலைத்தான் அதிகப்படுத்தி வருகிறது. உதாரணமாக, 1950—56 ஆகிய வருடங்களில் அமெரிக்கா, அரபுநாடுகளுக்கு கொடுத்த "உதவி" 13 கோடியே 60 லட்சம் டாலர்களாகும்; ஆனால் அரேபியாவிலிருக்கும் எண்ணெய் செல்வத்தை உற்பத்தி செய்யும் அமெரிக்க அராம்கோ எண்ணெய் கம்பெனி மட்டும் வருடமொன்றுக்கு 30 கோடி டாலர் வருமானம் பெற்று வருகிறது.

எகிப்துக்கெதிரான பிரிட்டிஷ், பிரஞ்சு ஆக்ரமிப்பு தோற்றதற்குப் பின், மத்யக் கிழக்கில் பிரிட்டிஷ், பிரஞ்சு செல்வாக்கு பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையை பயன்படுத்திக்கொண்டு தன் ஆதிக்கத்தை மேலும் பலப்படுத்திக் கொள்ளுவதற்கு அமெரிக்கா "ஐஸன்ஹோவர்" கொள்கை என்ற திட்டத்தை முன் வைத்திருக்கிறது.

மத்ய கிழக்கின் அரசியல் நிலைமையில் "சூன்ய இடை வெளி" ஏற்பட்டிருப்பதாகவும், இதைப் பூர்த்தி செய்யத் தான் "ஐக் கொள்கை" என்றும் பறைசாற்றப்படுகிறது. ஆனால் உண்மையில், மத்ய கிழக்கில் உள்ள சுதந்திர நாடு களை தன் ஏகபோக ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவது தான் "ஐக் கொள்கை"யின் நோக்கமாகும்.

காலனி நாடுகளின் சுதந்திரத்திற்காக அமெரிக்கா செயல்படுகிறது என்ற பிரமையை உண்டாக்க அமெ ரிக்கா முயற்சிக்கிறது. உண்மையில், பிரிட்டிஷ், பிரஞ்சு ஆதிக்கத்தை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டே, காலனி நாடுகள் மீது தன் ஏகபோக ஆதிக்கத்தை நிலைநாட்டுவது தான் அமெரிக்காவின் நடைமுறையாக இருந்து வருகிறது. லத்தீன் அமெரிக்காவிலுள்ள பல நாடுகளையும், பிலிப் பைன் நாட்டையும் அமெரிக்க ஏகபோக முதலாளிகள் காலனி நாடுகளாகவே சுரண்டி வந்திருக்கின்றனர். இரண்டாவது உலக யுத்தகாலத்திலிருந்து, ஐரோப்பா விலும், ஆசியாவிலும், ஆப்ரிக்காவிலும், பஸிபிக் பிர தேசத்திலும், மத்ய கிழக்கிலும் புதிய ஸ்தானங்களை கைப் பற்ற அமெரிக்க ஏகாதிபத்யவாதிகள் தொடர்ந்து ஏற்பாடு செய்து வருகின்றனர். தற்பொழுது அவர்களின் பிரத் யேக கவனம் மத்ய கிழக்கிலும், ஆப்ரிக்காவிலும் கூர்மை யாக திரும்பியிருக்கிறது. ஆகவே மத்ய கிழக்கு பற்றிய "ஐக் கொள்கை" அப்பட்டமான ஏகாதிபத்ய கொள்கை யாகும். மத்ய கிழக்கு பிரதேசத்தை அமெரிக்காவின் ஏகபோக ஆதிக்கத்திற்குள் கொண்டு வருவதற்காக போடப்பட்டிருக்கும் ஏகாதிபத்ய திட்டமாகும். "ஐக் கொள்கை"யின் முதல் தாக்குதல் ஜோர்டான் தேசத்தில் துவக்கப்பட்டிருப்பது கண்கூடு. ஜோர்டானில் ஜனநாயக சக்திகளை தோற்கடிப்பதற்கு பிற்போக்கு சக்திகளுக்கு அமெரிக்கா தன் ராணுவ சக்தியின் மூலம் ஆதரவு தர முன் வந்தது.

அமெரிக்கா-பிரிட்டன், அமெரிக்கா-பிரான்ஸ் ஆகிய ஏகாதிபத்தியங்களுக்கிடையில் முரண்பாடுகள் கூர்மை யாகி வருகின்றன என்பது தெளிவு. இதே சமயத்தில் மேற்கு ஜர்மனியின் முக்யத்வம் வளர்ந்து வருவதும் இந்த

முரண்பாடுகளை மேலும் சிக்கலாக்கி வருகிறது. மேற்கு ஜர்மனியின் உருக்கு, இரும்பு உற்பத்தியின் அளவு பிரிட்டனையும், பிரான்சையும் மிஞ்சிவிட்டது; இதனால் முதலாளித்வ நாடுகளில் உருக்கு, இரும்பு உற்பத்தியில் முதல் ஸ்தானம் அமெரிக்காவிற்கும், இரண்டாவது ஸ்தானம் மேற்கு ஜர்மனிக்கும் வந்துவிட்டது. நிலக்கரி உற்பத்தியில், மேற்கு ஜர்மனி முதலாளித்வ நாடுகளில் தற்பொழுது 3-வது ஸ்தானத்தை வகிக்கிறது. அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக, ஏற்றுமதி வியாபாரத்தில் இரண்டாவது ஸ்தானத்தை அடைவதற்காக மேற்கு ஜர்மனி தற்பொழுது பிரிட்டனுடன் போட்டியிட்டு வருகிறது. ஆகவே இப்பொழுது பிரிட்டனுடனும், பிரான்சுடனும் பலமாகப் போட்டியிடும் சக்தியோடு மேற்கு ஜர்மனி விளங்குகிறது. வட அட்லாண்டிக் ஒப்பந்த ராணுவ அமைப்பிலும் மேற்கு ஜர்மனியின் பாத்திரம் முக்யத்வ மடைந்து வருகிறது.

ஜப்பான் வளர்ந்து வருவது, தூரகிழக்கில் முதலாளித்வ முரண்பாடுகளை அதிகரிக்கிறது யுத்தத்திற்கு முந்திய காலத்தில் இருந்த இயந்திரத் தொழில் உற்பத்தியின் அளவைக் காட்டிலும் இருமடங்கு அதிகமாக ஜப்பானின் தொழிற் உற்பத்தி இப்பொழுது பெருகியிருக்கிறது. தன் ஏற்றுமதி வியாபாரத்தை குறிப்பாக ஆசிய தேசங்களுடன் உள்ள தன் ஏற்றுமதி வியாபாரத்தை— விஸ்தரிக்க ஜப்பான் தீவிரமாக முயற்சிக்கிறது; இந்த முயற்சியில் ஜப்பான் பிரதானமாக பிரிட்டனை பின்னுக்குத் தள்ள முயற்சிக்கிறது. இதே சமயத்தில் ஜப்பானிய மக்கள் தங்கள் நாட்டின்மீது அமெரிக்கா செலுத்திவரும் சர்வாதிகார ஆதிக்கத்தை ஒழிப்பதற்கும் விரும்புகின்றனர்.

இவ்வாறாக பிரதான முதலாளித்வ நாடுகளுக்கிடையில் முரண்பாடுகள் தீவிரமடைந்து வருகின்றன. முதலாளித்வ உற்பத்தி முறையின் இயற்கையான கோளாறுகள் இந்நாடுகளின் பொருளாதார அமைப்பைப் பாதித்துவருகின்றன; இந்தச் சூழ்நிலையில், மார்க்கட்டுகளுக்கான போராட்டம் முதலாளித்வ நாடுகளுக்கிடையில் மேலும் மேலும் கடுமையாகி வருகிறது.

பெரும் முதலாளித்வ நாடுகளுக்கிடையில் வளர்ந்து வரும் முரண்பாடுகளை அமுக்கி வைப்பதற்காக, சோஷலிஸ்ட் முகாமுக் கெதிராக ஆக்ரமிப்புக் கொள்கையை பலப்படுத்துவதற்கும், ராணுவ நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கும் ஏகாதிபத்ய நிபுணர்கள் முயற்சிக்கின்றனர். சோஷலிஸ்டு நாடுகளுக்கெதிராக அரசியல், ராணுவ ரீதியில் சதி செய்யும் கொள்கையின் அடிப்படையிலும், அதைத் தொடர்ந்து மேற்கு ஜர்மனியை தீவிரமாக ஆயுத பாணியாக்கும் கொள்கையின் அடிப்படையிலும் தங்களுக்குள் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கு முதலாளித்வ நாடுகள் ஏற்பாடு செய்கின்றன.

ஆயினும் இந்த ஏற்பாடுகளைச் செய்துவரும் பொழுதே ஏகாதிபத்யங்களுக்கிடையில் வித்தியாசங்களும் ஏற்பட்டு வருகின்றன. உதாரணமாக, சீனுவிற்கு எதிராக வியாபார பகிஷ்காரத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று அமெரிக்கா விரும்பியது; ஆனல் பிரிட்டன் இந்தக் கொள்கையை நிராகரித்துவிட்டு, இதுவரை தடை செய்யப்பட்டிருந்த பல இயந்திரப் பொருள்களையும் சீனுவிற்கு ஏற்றுமதி செய்து சீனுவுடன் தன் வியாபாரத்தை வளர்க்கப் போவதாக பிரிட்டிஷ் சர்க்கார் சமீபத்தில் முடிவு செய்திருக்கிறது.

ஆயினுங்கூட சோஷலிஸ்ட் நாடுகளுக் கெதிராகவும், புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளுக் கெதிராகவும் ஏகாதிபத்திய நாடுகள் செய்துவரும் ஆக்ரமிப்பு ஏற்பாடுகளை உஷார்த்தன்மையுடன் கவனித்து அவற்றை தோற்கடிக்க வேண்டிய அவசியத்தை குறைத்து மதிப்பிட முடியாது.

## சோஷலிஸ முகாம்-உலக சமாதானத்தின் பலம் பொருந்திய கோட்டை

சோஷலிஸ முகாமில் பின்வரும் நாடுகள் ஒன்றுபட்டிருக்கின்றன. சோவியத் யூனியன், சீன, அல்பேனியா, பல்கேரியா, ஹங்கேரி, வடவியட்நாம், கிழக்கு ஜர்மனி, வடகொரியா, மங்கோலியா, போலந்து, ருமேனியா;

செக்கோஸ்லாவியா இந்த நாடுகளில் வாழும் மக்களின் எண்ணிக்கை 90 கோடிக்குமதிகமாகும். இது உலக மக்கட் தொகையில் மூன்றில் ஒரு பகுதியாகும்.

1917-ம் வருட அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியின் விளைவாக சோவியத் யூனியன் உதயமாகி ஒரு நாட்டில் சோஷலிஸ சமுதாயத்தைக் கட்டி வளர்த்தது.

இரண்டாவது உலக யுத்தத்தின் இறுதியில், ஜர்மன் பாஸிசமும், ஜப்பானிய ஏகாதிபத்தியமும் தோற்கடிக்கப் பட்டபின், ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் உள்ள பல நாடுகள் சோஷலிஸ்ட் பாதையில் பிரவேசித்தன. இவை, உலகத்தின் முதலாவது சோஷலிஸ்ட் நாடாகிய சோவியத் யூனியனுடன் இணைந்து நின்று, சகோதர உறவுகொண்ட நேச அணியை அமைத்தன. இந்த நேச அணியின் திட்டம் சிறந்த சமூக அமைப்பான கம்யூனிஸத்தை தங்கள் நாடுகளில் கட்டிவளர்ப்பதாகும். சோஷலிஸம் இன்று ஒரு உலக அமைப்பாக வளர்ந்துவிட்டது.

சோஷலிஸ முகாமின் வளர்ச்சியின் விளைவாக உலகப் பொருளாதாரத்தில் சோஷலிஸ்ட் அமைப்பும், சோஷலிஸ்ட் உலகமார்க்கட்டும் தோன்றியது, இந்த சோஷலிஸ்ட் உலக அமைப்பும், சோஷலிஸ்ட் உலக மார்க்கட்டும் துரிதமாக வளர்ந்து பெருகி வருகிறது.

சோஷலிஸ முகாம் நாடுகளுக்கிடையில் சகோதர ஒத்துழைப்பின் அடிப்படையில் உறவுகள் பலமடைந்து வருகின்றன. ஏற்றத் தாழ்வான வளர்ச்சி மட்டத்தில் இந்நாடுகள் இருந்தபோதிலும், பூரண சமத்வத்தின் அடிப் படையில் இந் நாடுகள் இயங்கி வருகின்றன; பரஸ்பர உதவியும், தோழமை பூர்வமான ஒத்துழைப்பும் சோஷலிஸ்ட் முகாமில் உள்ள பின் தங்கியுள்ள நாடுகளின் பொருளாதார வளர்ச்சி துரிதமாக ஏற்படுவதை சாத்திய மாக்குகின்றன.

சோஷலிஸ முகாம் மேலும் மேலும் பலமடைவதுதான், எல்லா சோஷலிஸ்ட் நாடுகளின் சுதந்திரத்தையும், அரசுரிமையையும் பாதுகாப்பதற்கான உறுதியான உத்திர வாதமாகும். அதனுல்தான் ஒவ்வொரு சோஷலிஸ்ட்

நாடும், சோஷலிஸ முகாமின் வளர்ச்சியில் ஆழ்ந்த அக்கறை கொண்டிருக்கிறது.

சோஷலிஸ்ட் நாடுகளின் நேச இணைப்பு தொழிலாளி வர்க்க சர்வதேசியத்தின் மகத்தான சக்தியை எடுத்துக் காட்டுகிறது; ஏனெனில் தொழிலாளிவர்க்க சர்வ தேசியம், தனித்தனி சோஷலிஸ்ட் நாடுகளின் தேச நலன்களையும், சோஷலிஸ்ட் நாடுகள் அனைத்தினுடைய பொதுவான நலன்களையும் இணைக்கிறது; அத்துடன் சமாதானம், ஜனநாயகம், சோஷலிஸம் ஆகிய மகத்தான கருத்துக்களின் பூரண வெற்றிக்காக நடைபெறும் போராட்டத்தில் சோஷலிஸ்ட் நாடுகள் அனைத்தையும் தொழிலாளி வர்க்க சர்வதேசீயம் இணைக்கிறது.

சோஷலிஸ்ட் உற்பத்தி முறையின் விளைவாகவும், சோஷலிஸ்ட் முகாமைச் சேர்ந்த நாடுகளுக்கிடையில் உள்ள பரஸ்பர உதவி, ஒத்துழைப்பு ஆகியவற்றின் விளைவாகவும், சோஷலிஸ்ட் நாடுகளின் பொருளாதாரம் மகத்தான வளர்ச்சியடைந்திருக்கிறது. சோவியத் யூனியனிலும், மக்கள் ஜனநாயக நாடுகளிலும் 1956-ம் வருடத்தில் ஏற்பட்ட இயந்திரத் தொழில் உற்பத்தியின் மொத்த அளவு, 1939-ம் வருட உற்பத்தியைக் காட்டிலும் 300 சதவிகிதம் அதிகமாகும்; ஆனால் இதே காலத்தில், முதலாளித்வ நாடுகளில் ஏற்பட்ட இயந்திரத் தொழில் உற்பத்தியின் விஸ்தரிப்பு 90 சத விகிதமேயாகும்.

சோஷலிஸ்ட் நாடுகளின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதற்கு ஏகாதிபத்யவாதிகள் பெரு முயற்சி செய்து வருகிறார்கள். சோஷலிஸ்ட் நாடுகளுடன் இதர நாடுகள் பொருளாதார உறவுகள் கொள்வதை தடுக்க ஏகாதிபத்ய வாதிகள் முயற்சி செய்கிறார்கள். மக்கள் சீனாவிற்கு பல வியாபாரப் பண்டங்களையும், இயந்திரங்களையும் ஏற்றுமதி செய்யக்கூடாது என்று அமெரிக்கா இதர முதலாளித்வ நாடுகளைத் தடுத்து வருவதன் நோக்கம் இதுதான். சோஷலிஸ்ட் நாடுகள் மீது பொருளாதார நிர்ப்பந்தத்தை பிரயோகிப்பதற்காக ஏகாதிபத்யவாதிகள் முயற்சிக்கிறார்கள்.

அத்துடன் சோஷலிஸ்ட் நாடுகளுக்கிடையில் பிளவை உண்டுபண்ணுவதற்காக "பூர்ஷ்வா தேசிய உணர்ச்சியை" ஏகாதிபத்யவாதிகள் உபயோகிக்க முயற்சிக்கிறார்கள்; ஆனால் இந்த முயற்சிகள் தோல்வியடையும் என்பது உறுதி. சோஷலிஸ்ட் நாடுகளுக்குள் எவ்வித தகராறுக்குரிய பிரச்னைகளும் ஏற்படாதவாறு பாதுகாத்துக் கொள்வதற்காக 1956, அக்டோபர் 30-ம் தேதியன்று சோவியத் யூனியன் "சோவியத் யூனியனுக்கும், இதர சோஷலிஸ்ட் நாடுகளுக்குமிடையில் நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேலும் பலப்படுத்துவதற்கும், விஸ்தரிப்பதற்குமான அடிப்படைகளைப் பற்றிய அறிக்கையை" வெளியிட்டது.

இதன் அடிப்படையில் சோவியத் யூனியனுக்கும், இதர சோஷலிஸ்ட் நாடுகளுக்குமிடையில் உள்ள உறவுகள் பூரணமாகவும், விரிவாகவும், விவாதிக்கப்பட்டு இந் நாடுகளுக்கிடையில் அரசியல், பொருளாதார, கலாச்சார ஒத்துழைப்பை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும், விஸ்தரிப்பதற்குமான முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் விளைவாக சோஷலிஸ்ட் முகாமின் பிளக்க முடியாத ஒற்றுமையும், இணைப்பும் மேலும் பலமடைந்திருக்கிறது.

சோஷலிஸ்ட் நாடுகளுக்கெதிராக ஏகாதிபத்யவாதிகள் தங்களின் நாசவேலைகளையும், இரகசிய சீர்குலைவு வேலைகளையும் தீவிரப்படுத்திவரும இன்றைய சூழ்நிலையில் சோஷலிஸ்ட் நாடுகளின் ஒற்றுமையும், சகோதர ஒத்துழைப்பும் மேலும் மேலும் பலப்படுத்தப்படுவது இன்றியமையாததாகும்.

ஏகாதிபத்யவாதிகள் பல ஆக்கிரமிப்பு கூட்டணிகளை அமைத்து செயல்பட்டு வருகிறார்கள். இவற்றில் பிரதானமான ராணுவக் கூட்டணி அட்லாண்டிக் ஒப்பந்தமாகும்; இந்த ஒப்பந்தத்தின் மூலம் மேற்கு ஜர்மனியை மீண்டும் ராணுவ தளமாக்கி, ஆயுதபாணியாக மாற்றி, ஏகாதிபத்யவாதிகள் யுத்தத்திற்கான தயாரிப்புக்களை தொடர்ந்து செய்து வருகின்றனர்.

இந்த நிலைமையில், தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக சோஷலிஸ்ட் நாடுகள் தங்களுக்குள் வார்சா உடன்படிக்கையை செய்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இந்த உடன்படிக்கையின்படி சோஷலிஸ்ட் நாடுகள் தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக பரஸ்பர ராணுவ உதவிகளுக்கான கூட்டுப் பாதுகாப்பு ஏற்பாட்டை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆக்ரமிப்புக் கூட்டணிகளை ஏகாதிபத்யவாதிகள் நீடிக்கும்வரை அதற்கெதிரான வார்சா உடன்படிக்கை ஸ்தாபனத்தை பலப்படுத்துவது எல்லா சோஷலிஸ்ட் நாடுகளின் புனிதமான கடமையாகும்.

சோவியத்-சீன நட்புதான் சோஷலிஸ்ட் முகாமின் மகத்தான வலிமையின் மிகவும் முக்யமான அம்சமாகும். எல்லா சோஷலிஸ்ட் நாடுகளுடனும் தங்களுக்கிருக்கும் சகோதர நட்பையும், கடமையுணர்வையும் சோவியத் யூனியனும், சீனவும் பிரகடனப்படுத்தி யிருக்கின்றன. சோஷலிஸ்ட் நாடுகளை சீர்குலைப்பதற்காக ஆக்கிரமிப்பு ஏகாதிபத்ய சக்திகள் ஆத்திரமூட்டக்கூடிய நடவடிக்கைகளில் இறங்கினல் அவை வன்மையுடன் எதிர்த்து முறியடிக்கப்படும் என்று சோவியத் யூனியனும், சீனவும் பிரகடனப்படுத்தி யிருக்கின்றன.

“சோவியத்-சீன நட்பைக் கண்டு எல்லா ஏகாதிபத்ய ஆக்ரமிப்பாளர்களும், யுத்த வெறியர்களும் நடுங்கட்டும்” என்று மா-சே-துங் குறிப்பிட்டிருக்கிறார்.

சோவியத் யூனியனுக்கும், யூகோஸ்லாவியாவிற்குமிடையே கடந்த காலத்தில் ஏற்பட்டிருந்த பிணக்கு நீங்கி, சோவியத்-யூகோஸ்லாவியா உறவுகள் சீர்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த உறவுகள் மேலும் பலப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது.

உலக சமாதானத்தை பலப்படுத்துவது, சர்வதேச பந்தோபஸ்தை உறுதிப்படுத்துவது, சர்வதேசங்களுக்கிடையிலும் ஒத்துழைப்பை பலப்படுத்துவது ஆகியவைதான் சோஷலிஸ்ட் நாடுகளுடைய கொள்கையின் உயிர்நாடியாகும்.

சோஷலிஸ்ட் நாடுகள் புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளுடன் நட்புறவையும், ஒத்துழைப்பையும் வளர்க்க பெரு முயற்சி செய்து வருகின்றன. புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு அரசியல் நிபந்தனைகளின்றி உதவி செய்து வருகின்றன.

சோஷலிஸ்ட் நாடுகள் எல்லா முதலாளித்வ நாடுகளுடனும் சமாதான சகவாழ்வு என்ற கொள்கை அடிப்படையில் நேச உறவை வளர்க்க தயாராக இருக்கின்றன. ஆனால் ஏகாதிபத்ய நாடுகளின் போக்குகள் சமாதான சக வாழ்வுக் கொள்கையை நிராகரிக்கின்றன; கெடுபிடி யுத்த நிலைமையை தீவிரப்படுத்துகின்றன.

சமீபத்தில் ஹங்கேரியில் ஏற்பட்ட சம்பவங்களும், எகிப்தின்மீது தொடுக்கப்பட்ட தாக்குதலும் இதை நிரூபிக்கின்றன. இந்தத் தாக்குதல்களின் மூலம் சோஷலிஸ்ட் நாடுகளையும், புதிதாகச் சுதந்தரமடைந்த நாடுகளையும் ஏககாலத்தில் பலவீனப்படுத்த ஏகாதிபத்யங்கள் திட்டமிட்டன. ஆனால் அவர்களின் திட்டம் பெருந் தோல்வியடைந்தது என்பதும் உண்மை.

சோஷலிஸ்டு நாடுகளும், புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளும் மேலும் மேலும் ஒன்றுபட்டு உலக சமாதானத்தையும், தங்களின் தேச சுதந்திரத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் ஏகாதிபத்யங்களின் ஆக்ரமிப்பு முயற்சிகளை தடுத்து நிறுத்த முடியும். எஞ்சியிருக்கும் காலனி நாடுகளில் வளர்ந்து வரும் சுதந்திர இயக்கங்களும், உலக முழுவதிலும் பலமடைந்து வரும் சமாதான இயக்கமும், ஏகாதிபத்யங்களின் யுத்த ஏற்பாடுகளை சீரழித்து வருகின்றன.

தேசங்களின் சுதந்திரத்தை பாதுகாப்பதிலும், யுத்த அபாயத்தை தவிர்ப்பதிலும், சமாதானத்தைப் பாதுகாப்பதிலும் சோஷலிஸ்ட் நாடுகளின் முயற்சிகளுக்கு உலக முழுவதிலும் ஆதரவு மேலும் மேலும் பெருகிவருகிறது.

# இந்திய அயல்நாட்டுக் கொள்கைபற்றி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்து

"இந்தியா புதிதாகப் பெற்றுள்ள சுதந்திரமும், அரசுரிமையும் ஏகாதிபத்திய அரசுகளின் பயமுறுத்தலுக்குள்ளாக்கப்படும் என்பதையும், இந்த ஏகாதிபத்திய அரசுகள் தங்களின் யுத்த முயற்சிக்காகவும், காலனி ஆதிக்கம் பெறுவதற்காகவும், சுதந்திர தேசங்களை அடிமைப்படுத்த முனைந்து நிற்கின்றனர் என்பதையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரித்துள்ளது."

ஐரோப்பிய அரசுகளுடன் சேர்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியம் உருவாக்கியுள்ள இராணுவக் கூட்டணிகள் எல்லாம் சோவியத் யூனியனுக்கு எதிராக மட்டும் திருப்பி விடப் பட்டதல்ல; ஆசியநாடுகள் உள்ளிட்ட சகல தேசங்களின் சுதந்திரத்திற்கும் ஆபத்தை விளைவிக்கக் கூடியது"...

(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பாலக்காடு காங்கிரஸ் தீர்மானத்திலிருந்து)

"யுத்த அபாய நெருக்கடி, இந்திய சுதந்திரத்திற்கெதிரான ஏகாதிபத்திய பயமுறுத்தல், நம்நாட்டிலும் உலகிலும் ஜனநாயக, சமாதான சக்திகளின் வளர்ந்துவரும் பலம் என்ற பகைப்புலனில், இந்திய அரசாங்கமானது மேலும் மேலும் ஏகாதிபத்திய அரசுகளுக்கெதிராகச் செல்ல ஆரம்பித்தது; உலக சமாதானம், ஆசிய சுதந்திரம், ஆசிய ஒற்றுமை, இந்திய சுதந்திரம் ஆகிய இலட்சியங்களுக்காகப் பகிரங்கமாகப் போராட ஆரம்பித்தது."

"யுத்தத்திற்கு எதிராக, இராணுவ ஒப்பந்தங்களுக்கு எதிராக, சமாதான உறவுகளை நிலைநாட்ட, வெகுஜன நாசகார ஆயுதங்களைத்தடை செய்ய நடந்துவரும் இந்த உலக வியாபகமான போராட்டத்திலே, சமீப வருடங்களில் இந்தியக் குடியரசு மேலும் மேலும் அதிகமான, பெரிதும் முக்கியமானதோர் பாத்திரத்தை வகித்து வருகிறது; இந்தியாவின் இந்தப் பங்கானது அதனுடைய சர்வதேசக்

கௌரவத்தை உயர்த்ியுள்ளது; ஒவ்வொரு இந்தியனின் இதயத்திலும் தேசியப் பெருமித உணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.''

"இந்தியாவின் இந்தப் பாத்திரமானது சமாதானத்தை விரும்பும் நாடுகளின் நட்பையும், கௌரவத்தையும் தேடித்தந்துள்ளது, ஏகாதிபத்யவாதிகளை அதிகமாகத் தனிமைப்படுத்தியுள்ளது. ஏகாதிபத்ய நிர்ப்பந்தத்திற்கு ஆசிய நாடுகள் தரும் எதிர்ப்பை பலப்படுத்தியுள்ளது. ஒரு சுதந்திர அரசுரிமையுள்ள குடியரசாக இந்தியா தோன்றி, சமாதான சுதந்திர இலட்சியக் கொடியை உயர்த்திப் பிடித்திருப்பதானது இன்றைய உலகில் ஆழ்ந்த முக்யத்வம் வாய்ந்ததோர் அம்சமாகும்......

(பாலக்காடு தீர்மானம்)

"சமாதானம், தேச சுதந்திரத்தின் பாதுகாப்பு ஆகியவற்றைப் பொறுத்தவரை, கீழ்க்கண்ட தேசவியாபகமான இயக்கங்களுக்காக, மிகவிரிந்த அளவிலே மக்களைத் திரட்டி, ஒன்று படுத்துவதுதான், கம்யூனிஸ்ட் கட்சியின் கடமையாகும் :—

(1) யுத்தத்திற்கு எதிராக; வெகுஜன நாசகார ஆயுதங்களான அணுகுண்டு போன்ற ஆயுதங்களைத் தடை செய்வதற்காக; ஆயுதக் குறைப்பிற்காக;

(2) இராணுவ ஒப்பந்தங்களை, குறிப்பாக தென் கிழக்கு ஆசியா ராணுவ ஒப்பந்தம், பாக்தாத் ஒப்பந்தம் ஆகியவற்றை எதிர்க்க.

(3) ஆசிய ஒற்றுமையை பலப்படுத்த; ஆசிய, பசிபிக் பிராந்தியத்திற்கான ஒரு கூட்டு சமாதான உடன்படிக்கைக்காக.

(4) ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் மக்கள் சீனக் குடியரசுக்குள்ள சட்டபூர்வமான உரிமையைப் பெறச் செய்ய; பஞ்சசீலத்தின் அடிப்படையில் சர்வதேசப் பிரச்னைகளிலும், பொருளாதார கலாச்சாரத் துறைகளி

லும் சோவியத் யூனியனுடனும், சீனவுடனும் நட்புறவை யும், ஒத்துழைப்பையும் பலப்படுத்த ;

(5) ஏகாதிபத்தியத்திற்கெதிரான காலனி மக்களின் போராட்டத்திற்குப் பூரண ஆதரவு கொடுக்க.

(6) கோவாவை விடுதலை செய்வதற்கான சக்தி வாய்ந்த நடவடிக்கைகளுக்காக.

(7) பாகிஸ்தானுடன் உள்ள உறவுகளை அபி விருத்தி செய்வதற்காக; சமாதான, நேச பூர்வமான பேச்சு வார்த்தைகள் மூலம் தகராறுக்கிடமான பிரச்னை களைத் தீர்த்துக்கொள்ள ; ஒரு யுத்த மறுப்பு ஒப்பந்தத்திற் காக ; பிரிவினையால் சீரழிந்து கிடக்கும் இந்திய-பாகிஸ் தான் பொருளாதார உறவுகளை மீண்டும் நிலைநிறுத்த ; நம்மிரு மக்களுக்குமிடையே பரஸ்பரம் சாதகமாக உறவு கள் நிலவுவதற்குக் குறுக்கே நிற்கும் முட்டுக் கட்டைகளை தகர்த்தெறிய ; அவர்களின் சகோதர உறவுகளைப் பலப் படுத்தக்கூடிய கலாச்சார உறவுகளையும், இதர உறவுகளை யும் பெருக்கி வளர்க்க

(8) பிரிட்டிஷ் காமன்வெல்த்திலிருந்து வெளியேறு வதற்காக''......

(பாலக்காடு தீர்மானம்)